

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தலைமைச் செயலக ஊழியர் சங்கம், ஜாக்டோ–ஜியோ கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு அனைத்து அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு போன்ற பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி பல்வேறு அறிவிப்புகளை சட்டமன்றப் பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ. வேலு, தங்கம் தென்னரசு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தலைமைச் செயலக ஊழியர் சங்கம், ஜாக்டோ–ஜியோ கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு அனைத்து அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு போன்ற பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி பல்வேறு அறிவிப்புகளை சட்டமன்றப் பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ. வேலு, தங்கம் தென்னரசு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் .த. உதயச்சந்திரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தலைமைச் செயலக ஊழியர் சங்கம், ஜாக்டோ–ஜியோ கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு அனைத்து அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு போன்ற பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி பல்வேறு அறிவிப்புகளை சட்டமன்றப் பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தலைமைச் செயலக ஊழியர் சங்கம், ஜாக்டோ–ஜியோ கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு அனைத்து அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு போன்ற பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி பல்வேறு அறிவிப்புகளை சட்டமன்றப் பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்கள் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தலைமைச் செயலக ஊழியர் சங்கம், ஜாக்டோ–ஜியோ கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு அனைத்து அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு போன்ற பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி பல்வேறு அறிவிப்புகளை சட்டமன்றப் பேரவையில் அறிவித்த மைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் உடன் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தலைமைச் செயலக ஊழியர் சங்கம், ஜாக்டோ–ஜியோ கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு அனைத்து அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு போன்ற பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, அரசு™ ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி பல்வேறு அறிவிப்புகளை சட்டமன்றப் பேரவையில் அறிவித்த மைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் உடன் உள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் – கொடைக்கானல் வட்டம் – மன்னவனூர் கிராமத்தில்

காட்டுப்பன்றி தாக்கி காயமடைந்தவர்களுக்கு நிதியுதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மே 3-

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், மன்னவனூர் கிராமத்தில் காட்டுப்பன்றி தாக்கி காயமடைந்தவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வரின் அறிக்கை வருமாறு:-

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், மன்னவனூர் கிராமம், உட்கடை கும்பூர், கும்பக்காடு பகுதியைச் சேர்ந்த ஜெயராஜ் (வயது 65) (த/பெ.கிருஷ்ணசாமி), திருமதி. சுசிலா (வயது 60) (க/பெ.ஜெயராஜ்) ஆகியோர் 26.4.2025 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் விவசாயப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுடன் சிறுவன் சிவன்பாண்டி (வயது 8) (த/பெ.சந்திரசேகர்) உடனிருந்துள்ளார்.

அந்நிலையில் விவசாய நிலத்தில் பணியின்போது எதிர்பாராதவிதமாக புதருக்குள் இருந்து வெளியே வந்த காட்டுப்பன்றி தாக்கியதில் மேற்படி மூன்று நபர்களும் பலத்த காயமடைந்து உடனடி யாக மன்னவனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதலுதவி அளிக்கப்பட்டு, மேல் சிசிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்ற செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இச்சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு என்னுடைய ஆறுதலைத் தெரிவித்துக்கொள்வதோடு, பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வரும் திருமதி.சுசிலா மற்றும் சிறுவன் சிவன் பாண்டி ஆகியோருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், லேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் ஜெயராஜ் என்பவருக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.



அரியலூரில் நடைபெற்ற, அழகப்பா பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் ரவியின் மகள், குன்னம் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், கல்லை கிராமத்தைச் சேர்ந்த செல்லதுரையின் மகன் மருத்துவர் அரவிந்த் மருத்துவர் அபிநயா ஆகியோரது திருமண விழாவில், அமைச்சர்கள் சா.சி.சிவசங்கர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

தஞ்சாவூர் மாவட்டம் -இராசராசசோழன் மணிமண்டபம் - அருங்காட்சியகம்

ரூ. 3 கோடியே 66 இலட்சம் மதிப்பில் புதுப்பிப்பு!

அமைச்சர் முனைவர் கோவி.செழியன் திறந்து வைத்தார்.

தஞ்சை, மே 3 -

தஞ்சாவூர் மாவட்டம் மாமன்னர் இராசராச சோழன் மணிமண்டம் மற்றும் அருங்காட்சியகம் மேம்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் முடிக்கப்பட்டு உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் 30.04.2025 அன்று திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திரு மதி.பா.பிரியங்கா பங்கஜம், தலைமையில், துரை.சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், மேயர் சண்.இராமநாதன் , துணை மேயர் மரு. அஞ்சுகம் பூபதி , ஆணையர் க.கண்ணன், வருவாய் கோட்டாட்சியர் திருமதி. இலக்கியா , பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் (கட்டடம்) நாகவேல், தஞ்சாவூர் வட்டாட்சியர் சிவகுமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மாநகராட்சி மாமன்னர் இராசராச சோழனின் பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாடப்படும் எனவும், தஞ்சாவூரிலுள்ள மாமன்னர் இராசராச சோழன் மணி மண்டபம் மேம்படுத்தி பொழிவூட்டப்படும் என கடந்த 02.11.2022 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தஞ்சாவூர் மாநகராட்சி மாமன்னர் இராசராச சோழன் மணிமண்டபத்தில் மேம்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. என அமைச்சர் பேசுகையில் கூறினார்.

ஜூன் மாதத்தில் புதிய சேவை தொடக்கம்

நாகை - இலங்கை கப்பல் பயணக் கட்டணம் குறைப்பு!

மாணவர்களுக்கு 10% தள்ளுபடி ஒரு ஆசிரியருக்கு இலவசம்!

நாகை, மே. 3-

நாகை இலங்கை கப்பல் போக்குவரத்து கட்டணம் குறைக் கப்பட்டுள்ளது. ஜூன் மாதத்தில் 250 பயணிகள் பயணிக்கும் மற்றொரு கப்பல் சேவை தொடங்கப்படவுள்ளதாக தனியார் கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் கோடை விடுமுறை தொடங்கியுள்ளதால் நாகப்பட்டினம் துறை முகத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு செல்ல போக்குவரத்து கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ரூ.8,500 டிக்கெட் விலைநிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. தற்பொழுது ரூ.8 ஆயிரமாக குறைக்கப்பட்டுள்ளது. பயணிகள் 10 கிலோ மட்டுமே லக்கேஜ் எடுத்து செல்ல அனுமதி இருந்த நிலையில் தற்போது 22 கிலோ வரை லக்கேஜ் எடுத்து செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளுக்கு டிக்கெட் விலையில் 10 சதவீத தள்ளுபடியும், அவர்களை வழி நடத்தி செல்லும் ஒரு ஆசிரியருக்கு இலவச டிக்கெட் என்றும் சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் நகர தி.மு.க. மற்றும் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் சார்பில் நடைபெற்ற மே தின கொடியேற்று விழாவில் தமிழ் அமைச்சர், மு.பெ.சாமிநாதன் கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டல குழுத்தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், ஒன்றிய கழக செயலாளர் கே.சந்திரசேகரன், நகர கழக செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம், விசைத்தறி தொழிற்சங்க தலைவர் தம்பிதுரை உள்பட விசைத்தறி சங்க நிர்வாகிகள், சுமைதூக்குவோர் தொழிற்சங்க நிர்வாகிகள், ஆட்டோ ஓட்டுநர் சங்க நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.